**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 1

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Jagadeesan

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 14th day of July 2022.

**Date: 14.07.2022, S.C.No. 71/2020 PW : 1, Tr. Jagadeesan**

**முதல் விசாரணை...**

நான் தற்பொழுது பொதட்டூர்பேட்டை மேற்கு கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் கீச்சலம் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்துவந்தேன். அப்போது பொதட்டூர்பேட்டை மேற்கு கிராம நிர்வாக அதிகாரி விடுப்பில் இருந்ததால், அந்த கிராமத்திற்கு நான் கூடுதல் பொறுப்பில் இருந்தேன். மணி என்பவர் பொதட்டூர்பேட்டை மேற்கு கிராம தலையாரி ஆவார். 11.03.2018 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் மணி என்பவர் என்னை செல்போனில் தொடர்பு கொண்டார். அடையாளம் தெரியாத ஒரு ஆண் பிரேதம் மேற்கூறிய கிராம காட்டுப்பகுதியில் கிடப்பதாக சொன்னார். நான் அந்த இடத்திற்கு சென்று பார்த்தேன். அந்த பிணத்தில் இருந்து துர்நாற்றம் இருந்தது. அந்த பிரேதத்தில் கருநீல நிறத்தில் ஒரு டி-சர்ட் இருந்தது. ஒரு லோயர் அணிந்த நிலையில் இருந்தது. அந்த பிரேதம் கிழக்குபக்கம் தலையும், மேற்கு பக்கம் காலும் இருந்தது. மஞ்சு புற்களால் அந்த பிரேதம் ஓரளவு மறைக்கப்பட்டிருந்தது. அதன்பின்பு பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தில் மாலை 5.00 மணிக்கு ஒரு புகார்மனு கொடுத்தேன். நான் கொடுத்த புகார்மனு என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த புகார்மனு அ.த.சா.ஆ.1. போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய அலுவலகத்திற்கும் பிரேதம் கிடந்த இடத்திற்கும் இடையே சுமார் 3

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY Date: 2022.07.15 11:02:57 +0530

கி.மீ தூரம் இருக்கும். எனக்கு தகவல் வரும்போது நான் வீட்டில் இருந்தேன். பிரேதம் கிடந்த இடத்திலிருந்து என் வீடு சுமார் 4 கி.மீ தூரத்தில் இருக்கிறது. என்னுடைய வீட்டில் இருந்து பிரேதம் கடந்த இடத்திற்கு செல்லும் வழியில் காவல் நிலையம் இல்லை. வலதுபக்கம் திரும்பி சென்றால் காவல் நிலையம் வரும். தகவல் கிடைத்தவுடன் சுமார் 4.00 மணிக்கு நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்றேன். என்னுடன் கிராம உதவியாளர் மணி என்பவரும் வந்தார். நான் அந்த இடத்திற்கு சென்றபோது கிராம மக்கள் 10, 15 பேர் இருந்தார்கள். அங்கே போலீஸாரும் இருந்தார்கள். பிரேதம் கிடந்த இடத்திற்கு அருகில் வேறு என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. அந்த பிரேதம் குப்புறகிடந்த நிலையில் இருந்தது. தலையில் இருந்து கழுத்து பகுதிவரை மஞ்சபுற்களால் மூடப்பட்டிருந்து என்று புகாரில் கூறியிருந்தேன். பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னதை வைத்து அந்த பிரேதத்தின் வயது 30 முதல் 35 என்று புகாரில் கூறியிருந்தேன். சுமார் 5 அடி தூரத்தில் இருந்து அந்த பிரேதத்தை பார்த்தேன். அழுகிய நிலையில் பிரேதம் இருந்தது. அந்த பிரேதத்தை பறவைகளோ, விலங்குகளோ சேதப்படுத்தி இருந்ததா என்று நான் உற்று பார்க்கவில்லை. அந்த இடத்திலிருந்து நான் நேரடியாக காவல் நிலையம் தான் சென்றேன். வி.ஏ.ஓ. வழிகாட்டுதலில் பரிவு 2ன் படி இவ்விதம் புகார்கொடுத்தால் 4 பிரதிகள் தயார்செய்து ஒன்றை அலுவலகத்தில் வைத்துவிட்டு, மற்றொன்றை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து, ஒரு புகாரை காவல் நிலையத்தில்

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.15 11:03:04 +0530

வைக்கவேண்டும். அந்த நடைமுறையை நான் இவ்வழக்கில் பின்பற்றவில்லை. பிரேதம் இருந்த இடத்திற்கு நான் செல்லப்போவதை உயர் அதிகாரிகளுக்கு சொன்னேன். இது சம்பந்தமாக வருவாய் ஆய்வாளருக்கு நான் அறிக்கையை 11.03.2018 அன்றே கொடுத்தேன். அந்த விவரத்தை போலீஸ் விசாரணையின் போது சொன்னேன். ஆனால் அந்த அறிக்கையை போலீஸாரிடம் கொடுக்கவில்லை. புகாரில் இடம் மற்றும் தேதியை குறிப்பிடவேண்டும். ஆனால் நான் கொடுத்த புகாரில் அதை எழுதவில்லை. நான் சொல்வது போல் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும், பிரேதம் எதையும் பார்க்கவில்லை என்றும், போலீஸார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தேதியை கூட குறிப்பிடாமல் பொய் புகார்கொடுத்தேன் என்றும், பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.15 11:03:11 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 2

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Mani

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 14th day of July 2022.

**Date: 14.07.2022, S.C.No. 71/2020 PW : 2, Tr. Mani**

**முதல் விசாரணை...**

நான் அத்திமஞ்சேரி பேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் பொதட்டூர்பேட்டை மேற்கு கிராம தலையாரியாக வேலை பார்க்கிறேன். வானிவிலாசபுரத்தை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவர் 11.03.2018 அன்று பட்டரை கிருஷ்ணன் என்பவர் நிலத்திற்கு அருகில் கால்வாயில் ஒரு ஆண் பிரேதம் கிடப்பதாக மாலை 3.30 மணிக்கு என்னிடம் சொன்னார். நான் அ.சா.1 ஜெகதீஷன் வி.ஏ.ஓ.விடம் தகவல் சொன்னேன். நான் 3.30 மணிக்கு பார்த்துவிட்டு 4.00 மணிக்கு வி.ஏ.ஓ.விடம் தகவல் சொன்னேன். நானும், வி.ஏ.ஓ.வும் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்றோம். தலை கிழக்கே, கால்கள் மேற்கு பார்த்தும் இருந்தது. கருநீல நிற டி-சர்ட் அந்த பிரேதம் அணிந்திருந்தது. கோணி பையால் பிரேதத்தை மறைத்து வைத்திருந்தார்கள். பின்பு பொதட்டூர்பேட்டை காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார்கொடுத்தார். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கோவிந்தராஜ் 3.30 மணிக்கு எனக்கு போன்மூலம் தகவல் கொடுத்தார். அவர் ஒரு பிணம் இருப்பதாக சொன்னார். அந்த பிரேத்தை யார் முதலில் பார்த்தார்கள் என்று அவர் என்னிடம் சொல்லவில்லை. நான் பிரேத்தை பார்த்துவிட்டு தான் வி.ஏ.ஓ.க்கு தகவல் கொடுத்தேன். பிரேதம் கோணி பையால் கீழ்பகுதியிலிருந்து அல்லது மேல்பகுதியிலிருந்து மூடிஇருந்ததா என்று நான்

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.15 11:03:18 +0530

சரியாக பார்க்கவில்லை. பிரேதம் குப்பற இருந்ததா மல்லாக்கா என்று நான் பார்க்கவில்லை. பிரேதம் மூடியிருந்ததால் அது ஆணா, பெண்ணா என்று என்னால் சொல்லமுடியாது. பக்கத்தில் உள்ளவர்கள் ஆண் என்று சொன்னார்கள். வி.ஏ.ஓ. 4.00 மணிக்கு வந்தார். அங்கே சுமார் 1.00 மணிநேரம் இருந்தோம். அங்கிருந்து வி.ஏ.ஓ. போன்மூலம் போலீஸாருக்கு தகவல் சொன்னார். போலீஸார் வந்தார்கள் அவர்கள் வந்து பிரேதத்தை எடுக்கும்வரை அங்கே இருந்தோம். போலீஸார் அந்த இடத்திற்கு சுமார் 2.00 மணிநேரம் கழித்து வந்தார்கள். போலீஸார் எப்படி எடுத்துசென்றார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நானும், வி.ஏ.ஓ.வும் போலீஸார் பிரேத்தை எடுத்துசெல்லுவம் வரை நாங்கள் அங்கு இருந்தோம். அந்த இடத்தில் இருந்து வி.ஏ.ஓ. அலுவலகம் சென்றோமோ என்று எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினமே காவல் நிலையத்தில் சுமார் 2 மணிநேரத்தில் புகார்கொடுத்தோம். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. புகார்கொடுக்கும்போது நான் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தேன். நான் சொல்வது போல் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை, அ.சா.1க்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.15 11:03:24 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 3

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Govindaraj

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 14th day of July 2022.

**Date: 14.07.2022, S.C.No. 71/2020 PW : 3, Tr. Govindaraj**

**முதல் விசாரணை...**

நான் வானிவிலாசபுரம் என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எங்கள் பகுதியில் வனகுழு தலைவராக இருக்கிறேன். பட்டரைகிருஷ்ணன் என்பவர் மகன் கோவிந்தராஜ் என்பவர் அவரது நிலத்தில் அவரது நிலத்திற்கு அருகில் கால்வாயில் ஒரு பிணம் இருப்பதாக எனக்கு தகவல் சொன்னார். கால்மட்டும் தெரிந்ததாகவும், துர்நாற்றம் அடிப்பதாகவும் அங்கே செல்ல பயமாக இருக்கிறது என்று சொன்னார். நான் அ.சா.2 மணி என்ற தலையாரிக்கு போன்மூலம் தகவல் சொன்னேன். வனதுறை வாட்சர் கதிர்வேலுக்கு நான் தகவல் சொன்னேன். SP CID க்கு நான் தகவல் சொன்னேன். 11.03.2018அன்று மதியத்திற்கு மேல் ஒரு பிரேதத்தை பார்த்தேன். கிழக்குபார்த்து தலையும், மேற்குபார்த்து காலும் இருந்தது. அதிக துர்நாற்றம் அடித்ததால் பக்கத்தில் கூட செல்ல முடியவில்லை. 10, 15 பேர் பார்த்தோம். ஆர்.கே.பேட்டை ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

வனதுறை அதிகாரிகளும் நான் சொன்ன ½ மணிநேரத்தில் வந்துவிட்டார்கள். பிணம் இருந்த இடம் வனதுறை கட்டுப்பாட்டில் வரும். மஞ்சபுற்களால் மூடப்பட்டிருந்தது. பிரேம் குப்புறஇருந்தது. பிரேதத்தில் பேண்ட் இருந்தது. அது ஆணா, பெண்ணா, அதன் வயதையும் என்னால் சொல்ல இயலாது. நான் மஞ்சபுற்களை பாத்த்தேன். கோணியை பார்க்கவில்லை. நான் 12.00

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.15 11:03:32 +0530

மணிக்குமேல் பார்த்துவிட்டு வந்துவிட்டேன். நான் பார்க்கும்போது போலீஸார் வரவில்லை. வனதுறையினர் வரும்போது நான் அங்கு இல்லை நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் போலீஸார் சொல்லிகொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.15 11:03:37 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.